Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JUNE 27, 2023

செவ்வாய்க்கிழமை ஜூன் 27, 2023 | ஒளி: 09 கதிர்: 027 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு ★ | FREE

4ஆவது முறையாக லிட்ரோ விலை குறைகிறது

லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 4ஆவது முறையாக குறைக்கவுள்ளதாகவும் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதியன்று மீண்டும் சிலிண்டர் விலை குறைக்கப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், திங்கட்கிழமை (26) தெரிவித்தார். தொடர்ச்சி P2

முட்டை, இறைச்சி பிரச்சினை முற்றாக தீர்க்கப்படும்



கோழி இறைச்சி மற்றும் முட்டை தொடர்பான பிரச்சினைகள் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் முற்றாக தீர்க்கப்படும் என்று நம்புவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கோழிப்பண்ணை தொழிலில் இருந்து வெளியேறும் பல வர்த்தகர்கள் இந்த நெருக்கடிக்கு காரணம் என்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக தாய்க் கோழிகள் இறக்குமதியும் குறைந்ததாக குறிப்பிட்டார்.

கொவிட் நெருக்கடி காலத்தில், முட்டை மற்றும் கோழி இறைச்சி விலைகள் வெகுவாகக் குறைந்திருந்த காரணத்தால், தொழிற்றுறையில் இருப்பவர்கள் தங்கள் வியாபாரத்தை கைவிட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

34% இலங்கை மக்கள்

உடைமைகளை விற்று உணவு உண்கின்றனர்

இந்நாட்டு வரலாற்றில் முதன்முறையாக 34 % மக்கள், தங்கள் வீடுகளில் உள்ள குளிர்சாதனப் பெட்டிகள், தொலைக்காட்சிகள், சலவை இயந்திரங்கள் போன்றவற்றை விற்பனை செய்து உணவு மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையை எட்டியுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை (26) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஏழ்மையான மக்களின் சமுர்த்தி நிவாரணத்தை துண்டித்து, 'அஸ்வெசும' நடைமுறைப்படுத்தப்படுகிறது. நாட்டை வக்குரோத்தாக்கி மக்களுக்கு துன்பங்களை ஏற்படுத்தி, இன்று மக்களை ஏமாற்றும் அஸ்வெசு திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. தொடர்ச்சி P2

சீன நிறுவனத்தால்

துறைமுக நகரில் மேலும் 1.2 பில் டொலர் முதலீடு

தொடர் ஒத்துழைப்புக்கும் சீனா உறுதி

சீன துறைமுக பொறியியல் கூட்டுத்தாபனம், கொழும்பு துறைமுக நகரத்திற்குள் அடையாளம் காணப்பட்ட பல திட்டங்களில் மேலும் 1.2 பில்லியன் டொலர் புதிய முதலீடுகளை உறுதி செய்துள்ளது.

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியுடனான சந்திப்பின் போது கூட்டுத்தாபனத்தின் தலைவர் டாங் கியாலியாங் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். தொடர்ச்சி P2

இலங்கை குரங்குகள் சீனாவுக்கு செல்லாது

இலங்கை 'டோக் மக்காக்' குரங்குகள் சீனாவுக்கு அனுப்பப்பட மாட்டாது என்று சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

சீனாவுக்கு குரங்குகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் சார்பிலேயே திறந்த நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட விடயத்தை சட்டமா அதிபர் அறிவித்துள்ளார். தொடர்ச்சி P2

'அஸ்வெசும' பயனாளிகளுக்கு அநீதி இழைக்கப்படாது

பொருளாதார ஸ்திரத்தன்மை தேவைப்படும் நபர்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'அஸ்வெசும' திட்டத்திற்கு அரசியல் சாயம் பூசி, தமது அரசியல் தேவைகளை நிறைவேற்ற சில தரப்பினர் முயற்சி மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. தொடர்ச்சி P2

நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தூதுக் குழுவினர், திங்கட்கிழமை (26) காலை நாடு திரும்பினர்.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரஸ், அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜெனட் யெலன், யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசுலே ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார். தொடர்ச்சி P2

இதுவரை 27 பேரை காவு கொண்டது டெங்கு

2023ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 47 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் நாட்டில் பதிவாகியுள்ள டெங்கு உயிரிழப்புகளின் எண்ணிக்கை 27 ஆக உயர்வடைந்துள்ளதாகவும் டெங்கு ஒழிப்பு ஜனாதிபதி நிபுணர் குழு தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2

தேசபந்து தென்னகோனுக்கு எதிரான

அழைப்பாணையை வலிதற்றதாக்கி ரிட்

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்று பிறப்பித்த அழைப்பாணையை வலிதற்றதாக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், திங்கட்கிழமை (26) நீதிப் பேராணை (ரிட்) பிறப்பித்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாம் இந்த உத்தரவை பிறப்பித்தது. தொடர்ச்சி P2

60 வகை மருந்துகளின் விலைகள் குறைப்பு

60 வகையான மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலைகள், திங்கட்கிழமை (26) முதல் அமலாகும் வகையில் 16 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சி P2

சன்மான உயர்வு: ஆயுதங்களை அள்ளிவரும் பொலிஸார்

சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சன்மானத் தொகையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளியான அறிவிப்பை அடுத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். பொல்பித்திகம பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டதுடன், தொடர்ச்சி P2

அவசரமாக கூடுகிறது பாராளுமன்றம்

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பிரேரணையை விவாதிப்பதற்கான பாராளுமன்ற அவசர கூட்டம் ஜூலை மாதம் 1ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவின் விசேட கூட்டம், இன்று (27) காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ச்சி P2

பல பிரச்சினைகளுக்கு இலங்கை தீர்வு கண்டுள்ளது

மோடியை பாராட்டினார் விஜேதாஸ

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் போது இலங்கைக்கு உதவிய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்தை பாராட்டுவதாக தெரிவித்த அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளதாகவும் இலங்கை அனைத்துப் பிரச்சினைகளையும் ஒவ்வொரு கோணத்தில் இருந்து தீர்த்து வருகிறது என்றும் தெரிவித்தார். அனைத்து சமூகங்களினதும் ஒருமித்த கருத்துடன் நீண்ட கால சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் விரைவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கும் என்றும் அவர் கூறினார். தொடர்ச்சி P2

தொழிலாளர்கள் நிராகரிப்பால் தொழிற்சங்கங்கள் முழிக்கின்றன

ரஞ்சித் ராஜபக்ஷ

பெருந்தோட்டங்களில் தொழிற்சங்கங்களுக்கு சந்தாக்காரர்களை இணைத்துக்கொள்ளும் செயற்பாடுகள் வருடத்துக்கு இரண்டு தடவைகள் முன்னெடுக்கப்படும். இவ்வருடத்தில் மிதமிருக்கும் ஆறு மாதங்களுக்கு சந்தாக்காரர்களை இணைத்துக்கொள்ளும் செயற்பாடுகள் பரவலாக இடம்பெறுகின்றன.

எனினும், சந்தாக்காரர்களாக தொழிலாளர்கள் இணைந்துகொள்வதில் அதிகம் நாட்டம் காட்டவில்லை. அத்துடன் பலரும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என தோட்ட முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

உடைமைகளை விற்று உணவு உண்கின்றனர்

தற்போது இந்த முடிவால் விசேட தேவையுடையவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை, சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை, ஏனைய நோய்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகைகள் என்பன நிறுத்தப்பட்டுள்ளன.

சமுர்த்தி பெறத் தகுதியானவர்களையும் நீக்கி விட்டு, தம் விருப்படி 'அஸ்வெசும' திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர். சமுர்த்தி நீண்ட கால பயனுடையது. 'அஸ்வெசும' ஜனாதிபதி தேர்தலை இலக்காக் கொண்டது. இது ஓர் அரசியல் ரீதியான முன்னெடுப்பு.

விதவைகள், தேவையுடையவர்கள் போன்ற கஷ்டப்படும் மக்களை இதிலிருந்து தூரமாக்குவது அவர்களை மேலும் சங்கடப்படுத்தும் நிலையாகும். அநீதிக்குள்ளான சமுர்த்தி பயனாளிகளை இணைத்துக் கொண்டு, அரசாங்கத்தின் இந்த அசாதாரண செயற்பாட்டுக்கு எதிராக மக்களுடன் வீதிக்கிறங்கி பேராட்டத்தை இன்றிலிருந்து ஆரம்பிப்போம்.

புதிதாக வருமானங்களை ஈட்டும் செயற்றிறன்கள் நிறைந்த குழுவும், சமூகத்தை வறுமையில் இருந்து மீட்டெடுத்து மக்களுக்கு சார்பான போக்கு கொண்ட தலைவரும் தேவை. ஐக்கிய மக்கள் சக்தியிடமே இந்த அணி உள்ளது.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு அடிமட்ட மக்கள் மீது உணர்வு இல்லை. அதனால்தான் அந்தக் கட்சியையும் அவரையும் கைவிட்டோம். இலவசக் கல்வி, இலவச சுகாதாரம், மக்களை வாழ வைப்பதற்கான ஏற்பாடுகள் இப்போதும் பல அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் நடைமுறையிலுள்ளன.

மேலும், இந்த இந்நாள்களில் தேசிய கடன் மறுசீரமைப்பு பற்றி பேசப்படுகிறது, இப்போது வெள்ளிக்கிழமையை வங்கி விடுமுறையாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். வியாழன் வங்கி விடுமுறை. வெள்ளி முதல் ஐந்து நாள்கள் வங்கி விடுமுறை. தேசிய கடன் மறுசீராக்கமாம். எம்.பிக்களான எங்களுக்கும் தெரியாது. மத்திய வங்கியின் நிதி விவகாரப் பகுதியில் உள்ளவர்களுக்கும் தெரியாது. உதாரணமாக, ஊழியர் சேமலாப நிதிக்கு பொறுப்பான மத்திய வங்கியின் நிதிக் குழு, வியாழன் அன்று துறைசார் மேற்பார்வை குழுவுக்கு அழைக்கப்பட்டனர்.

கடன் மீளச்செலுத்தல் வருடங்கள் நீட்டிக்கப்படுமா அல்லது வட்டி விகிதத்தில் மாற்றம் ஏற்படுமா அல்லது குறிப்பிட்ட தொகை வெட்டப்படுமா என்று தெரியவில்லை என்பது இங்கு புலப்பட்டது. ஆனால் ஜனாதிபதியின் சமையலறை அமைச்சரவைக்கு இது தெரியும்.

வைப்பாளர்களின் மூலதனம் மற்றும் வட்டி விகிதங்களுக்கு எதுவும் நடக்காது என்று மத்திய வங்கி ஆளுநர் நேற்று (ஞாயிறு) தெரிவித்தார். இது திறைசேரி முறிகள் மற்றும் இறையாண்மைப் பத்திரங்களை வாங்கியவர்கள் கடன் கழிப்பை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதை சுட்டுகிறது. அப்படியானால் தேசிய பங்குதார்களான ஊழியர் சேமலாப நிதியமும் இதில் அடங்குகிறது.

எனவே, உள்நாட்டில் கடனை மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டாம் என பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும்.

இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் உள்ள நாட்டில் இருபத்தி இரண்டு மில்லியன் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தத் தேசிய கடன் மறுசீரமைப்பை வேண்டாம் என்று சொன்னால், சர்வதேச நாணய நிதியம் செவிசாயக்கும். ஜனாதிபதி சொல்வது போல் நாங்கள் ஆடத் தயாரில்லை" என்றார்.

மூட்டை, இறைச்சி...

அதனை அடுத்து ஏற்பட்ட உற்பத்தி குறைவால் தட்டுப்பாடு ஏற்பட்டு விலையும் அதிகரித்துள்ளதாகவும் நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்கள் தேவைப்படும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டுதான் முட்டைகளை இறக்குமதி செய்ய முடிவெடுத்துள்ளோம் என்று அவர் வலியுறுத்தினார்.

உள்ளூர் பண்ணைகளில் கணிசமான எண்ணிக்கையில் குஞ்சுகள் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் இது உற்பத்தியை அதிகரிக்க உதவும் என்றும் கூறிய அமைச்சர், தற்போதுள்ள தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு அடுத்த மூன்று மாதங்களுக்குள் தீர்க்கப்படும் என நம்புவதாகவும் இந்த ஆண்டு இறுதிக்குள் முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்

இதுவரை 27 பேரை...

எதிர்வரும் வார இறுதியில் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்புக்கான விசேட சுத்திகரிப்பு வேலைத்திட்டம் அமல்படுத்தப்படவுள்ளதால், மக்கள் வீடுகளிலேயே தங்கி அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோருவதாக டெங்கு ஒழிப்பு நிபுணர் குழுவின் தலைவியும், சுகாதார இராஜாங்க அமைச்சருமான விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களை உள்ளடக்கி ஒரு வாரத்திற்கு நுளம்பு குடம்பிகளை கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் டெங்கு ஒழிப்புக்கான அமைச்சர் குழுவொன்றையும், நிபுணர் குழுவொன்றையும் நியமித்ததோடு நிபுணர் குழுவால் மாகாண மட்டத்தில் 09 உப குழுக்கள் நியமிக்கப்பட்டு நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

டெங்கு நுளம்புகள் அதிகம் பெருகும் பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக வளாகங்கள், கைவிடப்பட்ட காணிகள் என்பவற்றில் பரிசோதனை மேற்கொள்ள விசேட தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு இந்தச் செயற்றிட்டங்கள் மேல்மாகாணத்தில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய மாகாணங்களுக்குத் தனித்துவமான பிரச்சினைகளை அடையாளங்கண்டு விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஊக்குவிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

பல பிரச்சினைகளுக்கு...

இந்திய விஜயத்தின் போது அங்குள்ள ஊடகங்களுத்து கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், "புலம்பெயர் தமிழர்கள் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் இலங்கை மக்கள் மற்றும் தலைவர்களுடன் அரசாங்கம் தொடர்ச்சியான தொடர்புகளை மேற்கொண்டு வருகிறது.

பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்திடமிருந்து எங்களுக்குக் கிடைத்த ஆதரவுடன் நாங்கள் எங்கள் பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்த்தோம். இலங்கையில் இயல்புநிலையை மீண்டும் கொண்டு வருவோம் என்று நாங்கள் நம்புகிறோம். 2022 இல் இலங்கை முன்னெப்போதும் இல்லாத நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளது. இது நாட்டில் அரசியல் கொந்தளிப்பைத் ஏற்படுத்தியுள்ளது. இது ராஜபக்ஷ குடும்பத்தை வெளியேற்ற வழிவகுத்தது. இந்த நெருக்கடியானது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்குவதற்கும் வழிவகுத்தது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தின் நிதி ஆரோக்கியத்தை மீட்டெடுப்பதற்கும் அரசாங்கம் போராடி வருகிறது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ பல முயற்சிகளை எடுத்தோம். 2016 ஆம் ஆண்டு சகல செயற்பாடுகளையும் ஆரம்பித்து, காணாமல் போனவர்களுக்கான அலுவலகங்கள், சமாதானத்தை ஏற்படுத்துதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த செயல்பட்டோம்.

இலங்கை அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவவுள்ளதுடன், அனைத்து சமூகங்களுடனும் ஒருமித்த கருத்துடன் நீண்டகால சமாதானத்தை உறுதிப்படுத்த முயல்கின்றோம்.

பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளோம்" என்றார்.

இலங்கை குரங்குகள் சீனாவுக்கு செல்லாது

இலங்கையின் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம் உட்பட 30 மனுதாரர்கள், இலங்கையிலிருந்து சீனாவிற்கு டோக் மக்காக் குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கான எந்தவொரு முடிவையும் முடக்கி ஆவணக் கேட்பு நீதிப் பேராணையை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

டோக் மக்காக் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர முன்னர் தெரிவித்திருந்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

60 வகை மருந்துகளின் விலைகள் குறைப்பு

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஜூன் 15ஆம் திகதி வெளியிட்டிருந்த நிலையில், திங்கட்கிழமை (26) முதல் விலைக்குறைப்பு அமலாகிறது.

60 வகையான மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலையை 16 சதவீதத்தால் குறைக்கும் யோசனைக்கு இந்த மாத ஆரம்பத்தில் அமைச்சரவை அனுமதி அளித்தது.

2015ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்ட தேசிய ஔடத ஒழுங்குமுறை ஆணையம், மருந்து விலை நிர்ணயம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்தும் பொறுப்பு வாய்ந்ததாகும்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளதை கருத்திற்கொண்டு மருந்துகளின் விலையை குறைக்க தீர்மானித்ததாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்திருந்தார்.

உரிய அதிகாரிகளுடனான விரிவான கலந்துரையாடலின் பின்னர், விலைக் கட்டுப்பாட்டால் கட்டுப்படுத்தப்படும் மருந்துகளின் விலையை குறைக்க தீர்மானிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் தெரிவித்ததுடன், இந்த விலை மாற்றம் மூன்று மாதங்களுக்கு பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

அழைப்பாணையை வலிதற்றதாக்கி...

2022ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதியன்று ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்களால் மீட்கப்பட்ட 17.8 மில்லியன் ரூபாய் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட தேசபந்து தென்னகோனை, பெப்ரவரி 16 அன்று நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1) (அ) பிரிவின் விதிகளின்படி செயற்பாட்டாளர் மஹிந்த ஜயசிங்கவால் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் மீது கோட்டை நீதவான் திலின கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் அழைப்பாணையை சவாலுக்கு உட்படுத்தி தேசபந்து தென்னகோன் தாக்கல் செய்த ரிட் மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், கடந்த பெப்ரவரி 16ஆம் திகதியன்று கோட்டை நீதவான் வழங்கிய அழைப்பாணையை இடைநிறுத்தி உத்தரவு பிறப்பித்திருந்தது.

மேலும் இந்த ரிட் மனுவின் இறுதி விசாரணை மற்றும் தீர்மானிக்கப்படும் வரையில் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதித்திருந்த நிலையிலேயே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

'அஸ்வெசும' பயனாளிகளுக்கு...

எவ்வாறாயினும், தகுதியானவர்களை தெரிவு செய்வதில் குறைபாடுகள் இருப்பின் அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் எனவும், இது தொடர்பில் எதிர்வரும் வாரங்களில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சகல தரப்பினருடனும் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், ஏழைகள் மற்றும் மிகவும் ஏழ்மையானவர்கள் ஆகிய 04 சமூகப் பிரிவுகளின் கீழ், 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் வழங்கப்படுவதுடன், ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

எவ்வாறாயினும், இந்தச் செயற்பாட்டில் குறைபாடுகள் காணப்படுவதாக சில தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் திட்டத்தின் பயனாளிகளை தெரிவு செய்வதில் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு மேன்முறையீடுகள் மற்றும் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை ஜூலை 10 ஆம் திகதி வரையில் நீட்டிப்பதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஸ் குணவர்தன அறிவித்துள்ளார்.

பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோரும் இது தொடர்பில் தேவையான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி, பொருளாதார ஒத்துழைப்பு தேவைப்படும் நபர் அல்லது குடும்பம் இந்த நன்மையை இழந்திருந்தால், இந்தக் காலப்பகுதியில் பிரதேச செயலகங்கள் ஊடாக விசாரித்து அதனை சரிசெய்வதற்கு வாய்ப்பு உள்ளது.

'அஸ்வெசும' திட்டத்தின் அடிப்படை நோக்கம் பொருளாதார ஸ்திரத்தன்மை தேவைப்படும் மக்களுக்குத் தேவையான பங்களிப்பை வழங்குவதே தவிர, வெறும் அரசியல் செயற்பாட்டின் அடிப்படையில் பல்வேறு தரப்பினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதல்ல என அரசாங்கம் வலியுறுத்துகிறது.

பல்வேறு பிரசாரங்களாலும் தனிப்பட்ட அழுத்தங்களாலும் குழப்பமடையாமல், தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் உங்கள் பெயர் இடம் பெறாவிட்டாலோ அல்லது தகுதியில்லாத நபரின் பெயர் அதில் இடம் பெற்றிருந்தாலோ, பிரதேச செயலக அலுவலகங்களின் ஊடாக அது தொடர்பில் ஆராயுமாறும் விண்ணப்பதாரர்களுக்கு எழும் எந்தப் பிரச்சினையையும் பிரதேச செயலாளரின் ஊடாக தீர்த்துக் கொள்ள முடியும் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

4ஆவது முறையாக லிட்ரோ விலை குறைகிறது

இந்த மாதம் 5ஆம் திகதியன்று, 12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாயால் குறைக்கப்பட்டது.

5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 181 ரூபாயாலும் 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 83 ரூபாயாலும் குறைக்கப்பட்டிருந்தது.

12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 3,186 ரூபாயாகவும், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,281 ரூபாயாகவும், 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 598 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

துறைமுக நகரில்...

இந்தச் சந்திப்பின் போது, சீன துறைமுக பொறியியல் கூட்டுத்தாபனத்தின் இலங்கையில் முதலீடுகளின் முன்னேற்றம் குறித்து இரு தரப்பினரும் ஆய்வு செய்ததாக கூறப்படுகிறது.

சீனாவின் 'என்சிம்' வங்கியின் தலைவர் வு புலினுடனான சந்திப்பில், இலங்கையின் தற்போதைய கடன் மறுசீரமைப்பு செயல்முறையுடன் முன்னோக்கி செல்லும் வழி குறித்து கலந்துரையாடியதாக அமைச்சர் சப்ரி கூறினார்.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு சீனா ஆதரவளிக்கும் என இந்தச் சந்திப்பின் போது உறுதியளிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்குவதாக சீன வெளியுறவு அமைச்சர் குயின் கங் தெரிவித்ததுடன், இலங்கைக்கு இயலுமான வகையில் அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

அமைச்சருனான சந்திப்பின் போது மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், ஒத்துழைப்பு தொடர்பில் சீனா முன்மாதிரியாக செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

நாடு திரும்பினார்...

அத்துடன், பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாந்த், பிராங்கோ போன் அமைப்பின் செயலாளர் நாயகம் ஆகியோருடனும் ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார்.

அவசரமாக கூடுகிறது...

இந்த விவாதத்துக்குப் பின்னர் பிற்பகலில் வாக்கெடுப்பு நடைபெறுமென அரசியல் வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

இந்த அவசர பாராளுமன்றக் கூட்டம் காரணமாக அனைத்து எம்.பிக்களையும் இந்த வாரம் கொழும்பில் தங்குமாறு ஆளும் கட்சி அமைப்பாளர் அலுவலகம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

இலண்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டுக்கு வந்ததையடுத்து இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

தொழிலாளர்கள் நிராகரிப்பால்...

இந்தத் தொழிற்சங்கங்களில் பல தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களிடம் இருந்து மாதாந்தம் சந்தாப்பணம் அறவிடுகின்றன. அவ்வாறு அறவிடப்படும் சந்தா பணத்தில் முறையான சேவை கிடைக்காமையில், அந்தத் தொழிற்சங்கங்களில் சந்தாக்காரர்களாக இணைத்துகொள்ள தொழிலாளர்கள் விரும்பவில்லை என்றும் முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அறவிடப்படும் சந்தா பணத்தில் இருந்தே, தொழிற்சங்கங்கள் தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. எனினும், சந்தாக்காரர்களின் எண்ணிக்கை குறைவடைதல் மற்றும் தொழிலாளர்கள் நிராகரிக்கின்றமையால், சில தொழிற்சங்கங்களை கொண்டு நடத்துவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

எனினும், தங்களுடைய தொழிற்சங்கங்களுக்கு ஆகக் கூடுதலான சந்தாக்காரர்களை இணைத்துக்கொள்ளும் வகையில், அவர்களைக் கவர்ந்திழுக்கும் விதத்தில் பல்வேறான உபாயங்களை சில தொழிற்சங்கங்கள் கையாண்டு வருகின்றன என்றும் அறியமுடிகின்றது.

சன்மான உயர்வு: ஆயுதங்களை...

40 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பன்பொல பிரதேசத்தில் மேலும் இரண்டு துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதுடன், 43 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் உஹன பிரதேசத்தில் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் 19 வயது இளைஞன் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சட்டவிரோதமான முறையில் துப்பாக்கியை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 58 வயதுடைய மற்றுமொருவர் நிக்கவெரட்டிய பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டு ள்ளதுடன், சந்தேகநபர்களை அந்தந்த பிரதேச நீதிமன்றங்களில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆலோசனைக் கோவை ஒன்றினூடாக உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மாஅதிபர் விடயங்களை தெளிவுபடுத்தியுள்ளார் என்று பொலிஸ் மாஅதிபரின் உத்தியோகபூர்வ அலுவலகம் அறிவித்துள்ளது.

பொலிஸார் மற்றும் தனியார் உளவுப் பணியில் ஈடுபடுவோரை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதி வரை கைப்பற்றப்படும் துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் தொடர்பில் இந்தச் சன்மானம் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான நீதவான்கள்

சமூக மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் திருமணம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையம், விழிப்புலனற்ற இருவருக்கு திருமணம் நடத்தி, முன்னுதாரண செயற்பாட்டை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆரையம்பதியைச் சேர்ந்த பொன்னம்பலம் சுஜிதரன், திருக்கோவிலைச் சேர்ந்த சண்முகம்பிள்ளை சசிவதனி ஆகிய இருவருக்குமே இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை (25) திருமணம் செய்துவைக்கப்பட்டது.

மண்முனைப்பற்று, ஆரையம்பதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வில், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம், மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவர் பாவலர் சாந்தி முகைதீன் உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள் மற்றும் உதயம் விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள், திருமண தம்பதியினரின் குடும்ப உறவினர்கள் என பெருமளவிலானோர் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்தனர்.

இதன்போது, ஆரையூர் கலைஞர் கலாவிபூசனம் எஸ். ரகுதாஸ் தலைமையிலான கலைஞர் குழுவினர் மணமக்களை வாழ்த்தும் வண்ணம் பாடல்களை பாடினர்.

யாழ். பல்கலைக்கழகத்தில்

பேராசிரியர்களாக மூவருக்கு பதவி உயர்வு

■ டி. லிஜித்தா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல், விவசாயம், இந்து கற்கைகள் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்கள், பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

பல்கலைக்கழக பேரவையின் மாதாந்தக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (25) துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில், பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

கலாநிதி எம். கே அகிலன்

கலாநிதி க. பகீரதன்

கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன்

அவற்றின்படி, பொறியியல் பீடத்தின் மின் மற்றும் இலத்திரனியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம். கே அகிலன் மின் மற்றும் இலத்திரனியல் துறை பேராசிரியராகவும் விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க. பகீரதன் விவசாய உயிரியல் துறையில் பேராசிரியராகவும் இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன், இந்து நாகரிகத் துறை பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

காலையிலும் ஒளிரும் வீதி விளக்குகள்

■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன்-டிக்கோயா மாநகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட சில பிரதேசங்களில் மாலை 6 மணியளவில் ஒளிரவிடப்படும் வீதி விளக்குகள் மறுநாள் காலை 8 மணியளவிலும் ஒளிர்ந்து கொண்டே இருப்பதாக பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால், ஆகக் கூடுதலாக மின்சாரம் வீணாக்கப்படுவதாகவும், இதுவும், பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சில நாள்களில் அணைக்கப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டினர். ஆகையால், உரிய நேரத்தில் வீதி மின் விளக்குகளை ஒளிரவிட்டு, உரிய நேரத்தில் அணைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு, உரிய அதிகாரிகளிடம் அம்மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தாய்க்கு வலிப்பு; குழந்தை மரணம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

தன்னுடைய குழந்தைக்கு சாப்பாட்டு ஊட்டிக்கொண்டிருந்த போது, 26 வயதான அந்தத் தாய்க்கு ஏற்பட்ட வலிப்பு நோயால், அக்குழந்தையின் தொண்டையில் உணவு இறுகி குழந்தை மரணமடைந்த சம்பவமொன்று பொகவந்தலாவையில் இடம்பெற்றுள்ளது.

பொகவந்தலாவை, பிரிட்வெல் தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகன் அகல்யா என்ற குழந்தையே இவ்வாறு மரணமடைந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (25) காலை உணவை வீட்டின் விறாந்தையில் வைத்து ஊட்டிக்கொண்டிருந்த போதே அந்தத் தாய்க்கு வலிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், குழந்தையின் தொண்டைக்குள் உணவு சிக்கிக்கொண்டது.

எனினும், தன்னுடைய தாயை அணைத்துக்கொண்டு அந்தக் குழந்தை மூச்சுத்திணறி கொண்டிருப்பதை கண்ட அயலவர்கள், இவ்விருவரையும் வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும், குழந்தை மரணமடைந்துவிட்டது.

குழந்தையின் தாய்க்கு தொடர்ச்சியாக வலிப்பு நோய் வருமென்றும், அதற்காக அவர் மருந்துகளை உட்கொள்பவர்கள் என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லிகைத்தீவில் கவிதை நூல் வெளியீட்டு விழா

■ அ. அச்சுதன்

எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மண்றத்தின் அனுசரணையில், ஈச்சிலம்பற்று ப. மதிபாலசிங்கத்தின் 'எனக்கொரு வரம் வேண்டும்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (25), மூதூர் - மல்லிகைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மூதூர் வலயக்கல்வி பணிப்பாளர் ஸீனத்துல் முனவ்ரா முஹம்மது நளீம் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும், ஆன்மீக அதிதிகளாக சிவயோகச்செல்வன் த. சாம்பசிவ சிவாச்சாரியார், சிவஸ்ரீ நமசிவாயக் குருக்கள் கலந்துகொண்டனர். மங்களேஸ்வரர் கலாலய மாணவிகளின் வரவேற்பு நடனங்களும் நிகழ்வில் இடம் பெற்றிருந்தன.

தேங்காய் பறித்து தருவதாக

சிறுமியை ஏமாற்றி துஷ்பிரயோக முயற்சி

64 வயது முதியவர் கைது

■ பாறுக் ஷிஹான்

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை ஏமாற்றி அழைத்து சென்று, அங்கசேட்டை செய்த முதியவரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்முனை புறநகர் பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (25) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தனது வீட்டின் வளவில் விளையாடிக் கொண்டிருந்த எட்டு வயது சிறுமியை, அவ்வழியால் மாடு மேய்த்து கொண்டிருந்த 64 வயது மதிக்கதக்க முதியவர், தேங்காய் பறித்துத் தருவதாக அழைத்து சென்று, அச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றுள்ளதாக சிறுமியின் உறவினரால் முறைப்பாடு வழங்கப்பட்டதை அடுத்து, சந்தேக நபரான முதியவர் கைது செய்யப்பட்டார்.



தோட்டத்தில் இருந்து தவறி விழுந்த மூதாட்டி பலி

■ செ.தீவாகரன், டி.சந்ரு, ஆ.ரமேஸ்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியோரத்தில் பங்களாவத்த பகுதியிலுள்ள விவசாய தோட்டத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த 70 வயதான முதியவர் ஞாயிற்றுக்கிழமை (25) மாலை தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

எடின்புரோ பிரதேசத்தைச் சேர்ந்த வேலுசாமி காளியம்மா என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விவசாய தோட்டத்தில் தொழில் புரிந்து கொண்டிருந்த போது மழையுடனான வானிலை நிலவியது. தோட்டத்தின் ஓரத்தில் இருந்து வழுக்கி நுவரெலியா-தலவாக்கலை பிரதான

வீதியில் விழுந்துள்ளார். தலையில் பலமாக அடிப்பட்டதன் காரணமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம், பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாண தமிழ்

ஆசிரியர் சங்கத்தால் கதிரைகள் கையளிப்பு

■ வ. தீவாகரன்

கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட அதிகஸ்ட பாடசாலையான கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்துக்கு 25 பிளாஸ்ரிக் கதிரைகள் சனிக்கிழமை (24) சிறுவர் வறுமை நிவாரண நிதியம் அமைப்பினூடாக வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த உதவியை, கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்க தலைவர் எ. பிரியகாந்தன், பொருளாளர் க. சண்முகநாதன், கிழக்கு மாகாண ஆசியர் சங்கத்தின் பிரசார செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான அ. ரமணன், அதன் மாவட்ட செயலாளர் தி. கிருபாகரன், சிறுவர் கல்வி மேம்பாட்டு நிதியத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பெ. புவனசுந்தரம், செயற்பாட்டாளர் சிவானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டு, பாடசாலையின் அதிபர் வ. துசாந்தன், ஆசிரியர் க. சந்திரகுமார், மாணவர்கள் ஆகியோரிடம் கையளித்தனர்.

கோவிலூர் செல்வராஜனின்

'கிழக்கிலங்கையின் மறைந்த இலக்கிய ஆளுமைகள்'

■ ஏ.எல்.எம் வினாஸ்

திருக்கோவில் பிரதேசத்தை சேர்ந்த கோவிலூர் செல்வராஜன் எழுதிய 'கிழக்கிலங்கையின் மறைந்த இலக்கிய ஆளுமைகள்' எனும் நூல் வெளியீட்டு விழா கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் சனிக்கிழமை (24) நடைபெற்றது.

கல்முனை ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் எழுத்தாளர் கா. சந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வெளியீட்டு உரையை வே. அரவிந்தனும் நூல் அறிமுக உரையை சஞ்சீவி சிவகுமாரும் வாழ்த்துரையை தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் க. குணராசாவும் நிகழ்த்தினர்.

நிகழ்வில் கௌரவ அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ. ஜே. அதிசயராஜ் கலந்து கொண்டதுடன், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன் கலந்து கொண்டார்.

யானைகளால் கதிர்காம கொத்துப்பந்தல் புதுப்பிக்கும் சடங்கு

■ வி.ரி சகாதேவராஜா

கதிர்காம கந்தன் கோவில் கொத்துப்பந்தல் புதுப்பிக்கும் சடங்கு, வழமை போல் யானைகளால் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்றது. இச்சடங்கு ஆறாம் நாள் சடங்காக பண்டுதொட்டு நடைபெற்று வருகிறது.

காட்டிலிருந்து வெட்டப்பட்ட மரக்கிளைகளை, 'ஹஸ்திராஜய்யா' தலைமையிலான யானைகள் சுமந்துவந்து, மரக்கிளைகளை மாணிக்க கங்கையில் கழுவியதை அடுத்து, மீண்டும் மரக் கிளைகளை யானைகள் தும்பிக்கையால் சுமந்து வந்து, கதிர்காம பஸ்நாயக்க நிலமே டிசான் குணசேகர சகிதம் கந்தனாலய கொத்துப்பந்தலில் இட்டன. இந்தக் காட்சிகளை ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்து இரசித்தார்கள்.

உலக போதைப்பொருள் எதிர்ப்பு தினத்திலாவது உறுதிபூண்டீர்களா?

மதுப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள், ஒவ்வொரு நாளும் குடிக்க ஆரம்பிக்கும் முன்னர், "இன்றுதான் இறுதி நாள்; இனிமேல், கையில் கூட தொடவே மாட்டேன்" என்று சத்தியம் செய்வதை பலரும் அவதானித்திருப்பீர்கள். அன்றுதான் ஒருமடங்கு அதிகமாகவே மதுவை பருகுவார்கள். புகைத்தலுக்கு அடிமையானவர்களும் அப்படிதான், "இதுதான் கடைசி" எனக்கூறி இரண்டொன்றை ஒரேடியாக இழுத்துப் புகைத்துவிடுவர்.

முதல்நாள் செய்யும் சத்தியம், மறுநாள் இரவே புதிய சத்தியமாக மீண்டும் செய்யப்படும். வருடத்தின் இறுதிநாள், இன்றேல் தங்களுடைய பிறந்தநாள், வீட்டில் யாருடையதாவது பிறந்தநாள் வரும்போதெல்லாம் சத்தியம் செய்துவிட்டு, மறுநாளே 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற நிலைக்குச் சென்றுவிடுவர். எனினும், "இனிமேல் குடிக்கவே மாட்டேன்" என்று உறுதிப்பூண்டவர்கள் பலர், அந்தக் கெட்டபழக்கத்தை முழுமையாகவே கைவிட்டும் உள்ளனர்.

பொலிஸ் திணைக்களத்தின் ஊடகப் பிரிவால், நாளாந்தம் வெளியிடப்பட்டும் செய்தி அறிக்கையை அவதானித்தால், அதில், 90 சதவீதத்துக்கும் மேற்பட்டவை, போதைப்பொருள் கைப்பற்றல் செய்தியாகவே இருக்கும். அதேபோல, விலையுயர்ந்த போதைப்பொருட்கள் மிகவும் சூட்சுமமான முறையில் இன்னும் கடத்தப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

இந்நிலையில், விலையுயர்ந்த மற்றும் கொஞ்சம் பயன்படுத்தினாலேயே தன்னிலை மறந்து இருக்கும் நிலைக்குள் தள்ளப்படும் ஹெரோய்ன், அபின், ஐஸ், ஹசீஸ், கொக்கெய்ன், ஒபியூம் உள்ளிட்ட போதைப்பொருட்களை பயன்படுத்துவோர் இருக்கத்தான் செய்கின்றனர். தாங்கள் போதையில் மிதப்பதற்காக உயிர்களையும் துச்சமென நினைத்துவிடுவர். கொலை மட்டுமட்டுமன்றி, கொள்ளைகளில் ஈடுபடுவோர் பலர் போதைக்கு அடிமையானவர்கள் என்பது தெரிந்ததே!

நமது நாட்டைப் பொறுத்தவரையில், 2022ஆம் ஆண்டில் மட்டும் 152,979 பேர், போதைப்பொருள் பயன்படுத்திய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில், 40 சதவீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்திலும், ஐந்து சதவீதத்தினர் கம்பஹா மாவட்டத்திலும், 12 சதவீதமானோர் குருநாகல் மாவட்டத்திலும் அடங்குகின்றனர்.

உலக போதைப்பொருள் எதிர்ப்பு தினமான ஜூன் 26ஆம் திகதிகூட, பலரும் கைது செய்யப்பட்டுள்ளமை பொலிஸ் ஊடகப் பிரிவின் அறிக்கையின் ஊடாகப் புலனாகின்றது. எனினும், புனர்வாழ்வு இல்லங்களில் அனுமதிக்கப்பட்டோரில் பலரும் திருந்தி, சாதாரண வாழ்க்கைக்குள் திரும்பிவிட்டிருக்கின்றனர்.

புகைப்பொருள் மற்றும் மது அருந்துவதால் தினமும் 100 பேர் உயிரிழக்கின்றனர். மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருளைப் பயன்படுத்துவோர் பெரும்பாலும் சாதாரண மக்களாக இருந்தாலும், அவற்றை கடத்துவது பெரும் பணமுதலைகள் என்பது வெளிப்படையாகும். அண்மையில் கூட, கிழங்கு கொள்கலனுக்குள் வைத்து, ஹெரோய்ன் கடத்தப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு பொதிகளுக்குள் மறைத்துவைத்து, போதைப்பொருளை இறக்குமதி செய்தமையால், இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம், உருளைக்கிழங்கு கொள்கலன்களை விடுவித்துக்கொள்வதில் இறக்குமதியாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். ஆக, போதையை முழுமையாகத் துடைத்தெறிய வேண்டுமெனில், சகலரும் உறுதிபூண வேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

படித்த நல்லவர்கள் கூட, கொந்தளிக்கும் மனநிலைக்கு ஆளாவதும் உண்டு. துன்பங்கள் மனிதர்களை உருட்டுகின்றன. ஏதோவொரு காரணத்தால் மனம் நிதானத்தை இழக்கின்றது. இழப்புகள், நட்டங்கள், பிரிவுகள் போன்றவை எவரையும் ஆட்டிவைக்கும்.

எப்படிப்பட்ட இறுக்கமான மனநிலையில் உள்ளவர்களும் பெரும் பிரச்சினைகளைச் சந்திக்கும்போது, செய்வதறியாமல் கலங்குகின்றார்கள்.

இத்தகைய நேரங்களில் அறிவை விடுத்து, நெஞ்சத்தில் கலக்கங்கள் இணைந்து கொள்வது இயல்பு. உலக யதார்த்தங்களில் எதுதான் நடக்காது? எந்த நேரத்திலும் கலங்காத உணர்வுடன் வாழும் வீரர்களும் உண்டு.

போர்க்களத்தை நேரில் கண்டவர்களுக்கும் கூட, இதயம் நெகிழ்ந்து தன்னிலை இழப்பதுண்டு. உறவே இல்லாத எவரையும் பரிதாப நிலையில் காணும்போது, நெகிழ்வது மனித இயல்பு.

அன்பு யாவரையும் நெகிழச் செய்யும். சகலரையும் தங்களுக்கு உரிமையானவர்கள் என எண்ண வைக்கின்றது. இன்ப - துன்பமே உலகில் பொதுமை. துணிவே துணை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

நல்லிணக்கமும் இரட்டைத் தோணிகளும்

மொஹமட் பாதுஷா

இலங்கை போன்ற நாடுகளில் நடக்கின்ற சம்பவங்களைப் பார்க்கின்ற போது, "கடந்தகால அநீதியின் வரலாற்றை திருத்தி அமைப்பதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதே மீளிணக்கம் அல்லது பகை மறப்பு ஆகும்" என்று நெல்சன் மண்டேலா கூறியுள்ளமை, இங்கு எப்போது சாத்தியம் என்று முன்கணிக்க முடியாதுள்ளது.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், யுத்த வலயத்துக்கு உள்ளும் பின்னர் அகதி முகாம்களிலும் மக்கள் பேரழிவைச் சந்தித்துக் கொண்டிருந்த காலப்பகுதியில், இரண்டு கொம்பன் யானைகளைப் பற்றி, தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் கவலைப்பட்டுக் கொண்டிருந்த விடயம் நினைவிருக்கலாம்.

அதேபோல், நீண்ட கடல் பயணத்தின் நடுவே தத்தளித்துக் கொண்டிருக்கின்ற நூற்றுக்கணக்கான புகலிடக் கோரிக்கையாளர்கள், உணவுக்காகத் தவித்துக் கொண்டிருக்கின்ற இலட்சக்கணக்கான வறிய மக்களின் நிமித்தம் குவிகின்ற அக்கறையை விட, 'டைட்டன்' நீர்மூழ்கியில் பயணித்த ஐந்து செல்வந்தர்களுக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என்பதையும் காண்கின்றோம்.

ஆகவே, எந்த விவகாரத்துக்கு அல்லது யாருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதை இங்கு பணமும் அதிகாரமும் செல்வாக்கும் அதிகாரத்தில் உள்ளவர்களின் மனவோட்டமும்தான் தீர்மானிக்கின்றன. வஞ்சிக்கப்பட்ட, அதிகாரங்கள் அற்ற, பலவீனமான மக்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுவதையே இதுபோன்ற சம்பவங்கள் வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன.

சமத்துவம் பேசுகின்ற உலக நாடுகளும் நடுநிலைமை பற்றி வகுப்பெடுக்கின்ற அமைப்புகளும், அதற்கெதிராக உலகில் நடைபெறுகின்ற பல சம்பவங்களை ஒரு குறிப்பிட்ட தருணம் வரைக்கும் வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கின்றன.

இலங்கையை எடுத்துக் கொண்டால், நல்லிணக்கம், இனசௌஜன்யம், ஒற்றுமை பற்றி அரசாங்கங்கள் தொடர்ச்சியாக பேசி வருகின்றன. இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒன்றுபடுவதன் அவசியத்தை வலியுறுத்தும் பாணியில்தான் ஆட்சியாளர்கள் பொதுவெளியில் கருத்துகளை முன்வைக்கின்றனர்.

இருப்பினும் நடைமுறை யதார்த்தம் என்பது, வேறு மாதிரியாக உள்ளதை குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, நல்லிணக்கம் என்று பேசிக் கொண்டே, நல்லிணக்கத்துக்குப் பாதகமான நகர்வுகளை பெருந்தேசியம் முன்னெடுத்து வருகின்றது. ஒரு காலை நல்லிணக்கம் என்ற தோணியிலும் மற்றைய காலை இனங்களை பிரித்தாளுதல் என்ற தோணியிலும் வைத்துள்ளதாக குறிப்பிடலாம்.

அரச இயந்திரமும் அதிகாரிகளும் இந்தச் செயற்பாடுகளுக்கு மறைமுகமாக ஆதரவளிக்கின்றனர். ஏன், பகிரங்கமாகவே ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் சில அதிகாரிகளும் இன நல்லிணக்கத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு துணை நின்றதையும் கண்டுள்ளோம். இன்றும் இந்த நிலைமை மாறவில்லை.

பல்லின, பல்கலாசார நாடொன்றில் இன, மத முரண்பாடுகள் ஏற்படுவது சாதாரண விடயமே. எங்கோ ஒரு மூலையில், இரண்டு முட்டாள்கள் முரண்படத் தொடங்குகின்ற போது, அது இரண்டு இனங்களுக்கு இடையிலான முரண்பாடாக விரிவடையும் வாய்ப்புள்ளது. ஒரு சிறிய சம்பவமே, இன நல்லிணக்கத்துக்குக் குந்தமாக அமைந்து விடக்கூடும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில், யுத்தம் என்பதன் ஆரம்ப புள்ளி கூட, ஒரு விதமான இனநல்லிணக்கத்தின் விரிசலில் இருந்துதான் தொடங்கியது. இதில் தனிச் சிங்களச் சட்டத்தின் வகிபங்கு முக்கியமானது.

ஆகவே, சிங்கள கடும்போக்காளர்கள், தமிழ் ஆயுதக் குழுக்கள், 83 கலவரத்தை அரங்கேற்றிய சிங்கள குழுக்கள், சஹ்ரான் கும்பல் போன்ற குழுக்கள், ஒட்டுக் குழுக்கள், இனவாதிகள், ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள் எனப் பல தரப்பினரும் இனமுரண்பாடுகளுக்கு சிறியதும் பெரியதுமாக காரணமாகி உள்ளனர்.

ஆனால், இதையெல்லாம் தாண்டி, ஒரு கட்டத்தில் இனநல்லிணக்கம் பற்றிய கருத்தியல் மீண்டும் மேலோங்கியது. அதாவது, ஏற்கெனவே இருந்த இன ஒற்றுமையை வருடக் கணக்காக பாடுபட்டு சீர்குலைத்து விட்டு, பிறகு குறுகிய காலத்துக்குள் அதனை மறுசீரமைக்கும் முயற்சிகள் இடம்பெற்றன. பெரும்பாலும் சாண் ஏற முழம் சறுக்கும் முயற்சிகளாகவே இவை அமைந்தன.

இனநல்லிணக்கத்தின் முதற்படி பகைமறப்பு என்பதை, இப்பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள நெல்சன் மண்டேலாவின் வார்த்தைகள் உணர்த்துகின்றன.

அந்த வகையில், இலங்கையில் வாழ்கின்ற மூவின மக்களும், தங்களுக்கு இடையிலான கடந்த காலத் தவறுகளை பரஸ்பரம் ஏற்றுக் கொண்டு, நல்லிணக்கத்தை நோக்கி நகர முற்பட்டார்கள். இவ்வாறு மக்கள் ஒற்றுமைப்பட ஆரம்பித்த தருணங்களில் எல்லாம், ஆட்சியாளர்கள் அல்லது அரசியல் தரப்புகள், இனவாத செயற்பாட்டாளர்கள் இதனை மிகச் சூட்சுமமான முறையில் சீர்குலைத்து வந்திருக்கின்றார்கள். குறிப்பாக பல விவகாரங்களில் அரச இயந்திரம், இதில் ஒரு வகிபாகத்தை எடுத்திருக்கின்றது என்பதைத்தான் ஜீரணிக்க முடியாதுள்ளது.

பிரித்தாள்வதன் மூலம் அரசியல் இலாபம் தேட முற்படுகின்ற தரப்பினரும் குறிப்பிட்ட சில வெளிநாடுகளும், இலங்கை மக்கள் இன, மத வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமைப்படுவதை உள்ளுக்குள் விரும்பவில்லை என்பதுதான் நிதர்சனமாகும்.

யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு, நாட்டில் மெல்ல மெல்ல ஏற்பட்ட பகைமறப்பு முயற்சிகளும் இனப்புரிந்துணர்வும் குறித்து, அரசாங்கங்கள் சர்வதேச அரங்கில் பெருமையடித்துக் கொண்டாலும், இதனை வைத்து அரசியல் செய்பவர்களுக்கு இந்த மாற்றம் விருப்பத்துக்கு உரியதாக இருந்ததா என்பதில் கடுமையான சந்தேகமுள்ளது.

ஆயுதப் போர் முடிவடைந்த பிறகு, முஸ்லிம்களை நோக்கிய ஒரு பாய்ச்சலை இனவாதிகள் நிகழ்த்தினர். கிட்டத்தட்ட பத்து வருடங்கள் இந்த நகர்வுகள் இடம்பெற்றன. இதற்கிடையில்தான் சஹ்ரான் பயங்கரவாத குழுவின் காட்டுமிராண்டித்தனமும் நடந்தேறியது. இப்போது வேறு கோணத்தில் இந்த நகர்வுகள் இடம்பெறுகின்றதோ என்ற எண்ணம் தோன்றுகின்றது.

பொதுவாக, இலங்கையில் இன, மத முரண்பாடுகளுக்கு பௌத்த மதம் ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்குப் பின்னால் உள்ள சூட்சுமத்தை, அறிவார்ந்த சிங்கள மக்கள் நன்கறிவார்கள். ஆனால், மேலோட்டமாக சிந்திக்கின்ற மக்களை நம்பித்தான் இந்த நகர்வுகளை அவர்கள் முன்னெடுக்கிறார்கள்.

இலங்கையில், இனநல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், பொறுப்புக்கூறலை நிலைநாட்ட வேண்டும் என்றும் ஐ.நா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. இந்தப் பின்னணியில், எத்தனையோ இனநல்லிணக்க முயற்சிகள், கலந்துரையாடல், செயலமர்வுகள் இடம்பெற்றன.

இவையெல்லாம் கருத்தியல் மாற்றங்களையே ஒப்பீட்டளவில் ஏற்படுத்தின. களநிலையில் பெரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால், ஒரு கட்டத்தில் எதிர்பாராத விதமாக அந்த நல்லிணக்கம், ஒற்றுமை திடீரென ஏற்பட்டது.

'ராஜபக்ஷ அரசாங்கத்தை துரத்தியடித்தல்' என்ற புள்ளியில் பேதங்களை மறந்து, அனைத்து மக்களும் 2022இல் ஒன்றுகூடினர். இதனால் ஏற்பட்ட மாற்றத்தை விடவும், இந்த நாட்டு மக்களின் ஒற்றுமையின் பலமானது சிங்கள அரசியல் தலைவர்களின் மனங்களில் ஏற்படுத்திய பயம்தான் இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இப்போது, நடக்கின்ற சம்பவங்களைப் பார்க்கின்ற போது, மக்களை மீண்டும் குழப்பி, இன ஒற்றுமையில் கீறல்களை ஏற்படுத்தி, மீண்டும் ஒரு பிரித்தாளும் அரசியலைச் செய்வதற்கு யாரோ முனைகின்றார்கள் என்று ஏன் மக்கள் கருதக் கூடாது?

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் மூவின மக்களும் வாழ்கின்றார்கள் என்றால், ஓர் இனக் குழுமத்தின் சனத்தொகை விகிதாசாரம் குறைவாக இருந்தாலும் அவர்கள் தமது மத தலத்தை அமைப்பதையோ இன அடையாளத்தை முன்னிறுத்துவதையோ சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். சகிப்புத்தன்மைதான் இன ஒற்றுமையின் அடிநாதமாகும்.

ஆனால், இலங்கையில் நடப்பது வேறுமாதிரியான நிகழ்வுகளாகும். பௌத்த மத அடையாளங்களின் பெயராலும் தொல்லியல் என்ற பெயராலும் நில ஆக்கிரமிப்புகள் நடக்கின்றன. அளவுக்கதிகமாக நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் கையகப்படுத்தப்படுவதை ஜனாதிபதியே அறிந்து வியந்து போனதை நாடே கண்கூடாகப் பார்த்தது. இதற்குப் பின்னால் பெரிய திட்டங்கள் இல்லை என்று யாரும் சொல்லி விட முடியாது.

இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்த வேண்டும் என்று ஐ.நா உள்ளிட்ட சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்க, அரசாங்கமும் அதற்காக முன்னிற்பதாக காட்டிக் கொண்டிருக்கின்ற ஒரு காலப் பகுதியில், இன்னுமொரு தரப்பு அதற்கு மாற்றமான காரியங்களில் ஈடுபடுகின்றது என்றால், இது ஒரு சூட்சும நகர்வு என்றுதானே சொல்ல வேண்டியுள்ளது.

தொல்லியல்களைக் காப்பாற்றுவது முக்கியமானது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், அது எல்லா இலங்கை மக்களினதும் தொன்மையை காப்பதாக இருக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இனம், மதம் மட்டும் இதில் முழுமுதல் இடத்தில் இருப்பது ஏற்றுக் கொள்ள முடியாது. இது நல்லிணக்கத்தை கொண்டு வரவிடாது.

அதுபோல, இலங்கையில் ஒரு பக்கத்தில் இன நல்லிணக்கம் பற்றி பேசிக் கொண்டு, மறுக்கத்தில் இன நல்லிணக்கம் சீர்குலைந்தாலும் பரவாயில்லை என்ற தோரணையில் எடுக்கப்படும் எல்லா வகையான நகர்வுகளும் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

இது, ஜெனீவாவை சமாளிப்பதற்காக செய்யப்பட வேண்டியதில்லை. நாட்டிலுள்ள மக்களுக்காக உளத் தூய்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டியதாகும்.

கடிதங்கள்

கந்தளாய் பிரதேசத்தில்

தென்னை மரங்களில் வெண்ணிற ஈ நோய்

திருகோணமலை மாவட்டத்தில், கந்தளாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வெண்ணிற ஈ நோய்த் தாக்கம் தென்னை, மா, கொய்யா, வாழை போன்ற மரங்களைத் தாக்கி வருவதாகவும் இதனால், பல ஏக்கர்கள் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நோயின் தாக்கம் ஆரம்பத்தில் தென்னை மரங்களுக்கு மட்டுமே இருந்ததாகவும் தற்போது மா, கொய்யா, வாழை மரங்களுக்கும் தாவி, அவையும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பல்வேறு வகையான கிருமி நாசினிகள், மருந்துகள் தெளித்தும் இதுவரைக்கும் நோய்த் தாக்கம் குறையவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை அறிவித்த போதும், அவர்கள் நோய்த்தாக்கம் இருக்கும் குறித்த பகுதிகளுக்குச் சென்று பாதிப்புகளை பார்வையிட்டு, தக்க தீர்வுகளை வழங்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, விவசாய அமைச்சு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி, வெண்ணிற ஈ நோயைக் கட்டுப்படுத்தி தருமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எப். முபாரக்



இயற்கை நியதியை மாற்றும் விஞ்ஞானம்

ச.தனுஷ்கா
danushka98sanjeeva@gmail.com
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
ஊடகக்கற்கைகள் துறை.



அபிவிருத்தியடைந்த நாடுகளில் இன்று பல தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை மனிதர்களது வாழ்க்கையில் பல அபரிமிதமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இன்று மனிதர்களது சிக்கல் மிகுந்த வாழ்க்கையானது, சுலபமாக்கப்படுகிறது. அவ்வாறு மானுடனின் வாழ்க்கையில் பாரிய சிக்கலாக காணப்படும் குழந்தையின்மை தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வாக, உலக நாடுகளில் பரவலாகவும் வெற்றிகரமாகவும் செயற்படும் தொழில்நுட்பமாக 'கருமுட்டை உறைதல்' அமைகிறது.

கருமுட்டை உறைதல் அல்லது கருமுட்டை வங்கி என்பது செயற்கைக் கருத்தரிப்பு நுட்பத்தின் ஒரு செயற்பாடாகும். இதன் மூலம் பெண்களின் கருமுட்டைகளை உறைய வைத்து, பின்னர் பயன்படுத்தலாம். இச்செயற்பாட்டின்போது முதிர்ந்த கருமுட்டைகள் கருப்பையிலிருந்து அகற்றப்பட்டு ஓர் ஆய்வகத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கு கருமுட்டைகள் எதிர்கால பயன்பாட்டிற்கு ஏற்ற சரியான வெப்பநிலையில் உறைய வைக்கப்படுகின்றன. இவ்வாறு ஆய்வகத்தில் உறைய வைக்கப்படும் கருமுட்டைகளில் தேவைப்படும்பொழுது, விந்தணுக்களை செலுத்தி அதன்பின்னர் கருவுற்ற முட்டையைப் பெண்ணின் கருப்பையில் செலுத்தலாம். பல்வேறு காரணங்களுக்காக குழந்தை பிறப்பை பிற்போடும் பெண்கள், தங்கள் கருவுறுதலைப் பாதுகாக்கவும் கட்டுப்படுத்தவும் இம்முறைமையைத் தேர்ந்தெடுக்கின்றனர். பெரும்பாலும் வயதாகும்போது பெண்களது கருமுட்டையின் தரம் குறைவடைய ஆரம்பிக்கின்றது. இந்தச்சூழலில் உறைய வைத்த கருமுட்டைகளைப் பயன்படுத்தி கருவுறுதலில் வெற்றி பெறலாம். இதன்மூலம் கருவுறுதல் சிகிச்சையையும் தவிர்க்கலாம்.

மருத்துவ தேவைகள், மாற்றமடையும் விருப்பங்கள் குழந்தை பெறுதலை தள்ளிப்போட விரும்பும் பெண்களுக்கு கருமுட்டையை உறைய செய்யும் தொழில்நுட்பம் ஒரு வரப்பிரசாதமாகும். கருவுறுதல் மருத்துவத்துறையில் கருமுட்டை உறைதல் என்பது ஒரு மிகப்பெரிய தொழில்நுட்ப முன்னேற்றமாகும். திருமணம் ஆகாத பெண்களும் இந்தத் தொழில்நுட்பம் மூலம் தங்களின் தரமான கருமுட்டைகளை பாதுகாத்து வைத்துக் கொள்கின்றார்கள். போட்டி மிகுந்த இன்றைய உலகில், தொழிலில் எந்தத்தடையும் இன்றி தாம் தொடர்ச்சியாக தொழில்புரிய விரும்பும் பெண்கள், குடும்ப சூழல் காரணமாக குழந்தை பெறுதலை தள்ளிப்போட விரும்பும் பெண்கள், கருமுட்டை உறைதல் செயல்முறைக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள்.

இன்று உலகளவில் பல பெண்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு புற்றுநோய் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்ற பெண்கள் 'கீமோதெரபி' அல்லது 'ரேடியோதெரபி' உள்ளிட்ட சில புற்றுநோய் சிகிச்சைகளை மேற்கொள்வர். இப்புற்றுநோய் சிகிச்சைகள் பெண்ணின் கருவுறுதலை பாதிக்கும். எனவே, புற்றுநோய் சிகிச்சைக்கு முன்னர் கருமுட்டை உறைதல் செயல்முறையைச் செய்து எதிர்காலத்தில் உயிரியல் குழந்தைகளைப் பெறலாம்.

வயது சார்ந்த கருவுறாமை பிரச்சினையை பற்றிக் கவலையுறும் பெண்களுக்குக் கருமுட்டை உறைதல் ஒரு நல்ல தீர்வாக அமைகிறது. இச்செயன்முறைக்கு உகந்த வயதெல்லையாக 20 முதல் 30 வயது கூறப்படுகிறது. இந்த வயதில் ஒரு பெண்ணால் தரமான கருமுட்டைகளை உற்பத்தி செய்ய முடியும். எப்போது தாய்மை அடைய வேண்டும் என்பதை இவ்வயதெல்லையில் தீர்மானிக்க முடியும்.

கருமுட்டை உறைதல் செயன்முறை இன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மட்டுமன்றி இந்தியாவிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருப்பினும் இந்தியாவில் மிகவும் விலையுயர்ந்த செயல்முறைகளில் ஒன்றாக காணப்படுகிறது. இச்சிகிச்சைக்கான செலவானது இடத்திற்கு இடம் மாறுபடும். இச்சிகிச்சையினை சாதாரண மக்களால் அணுக முடியாதென்பது இதன் குறைபாடாக உள்ளது.

மனித உடலில் காணப்படும் உயிரியல் கடிகாரத்தின் செயற்பாட்டினை இக் கருமுட்டை உறைதல் தொழில்நுட்பம் மாற்றிமைக்கிறது. தாய்மை எனும் புனிதமான நிலையை அடைவதே ஒரு பெண்ணின் ஆத்மார்த்தமான சந்தோஷமாகும். அதற்கு தடையாக அமையும் காரணிகளை இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் இலகுவாக கடந்து செல்ல முடிகிறது. இயற்கை என எண்ணிய அனைத்தும் இன்று நவீன தொழில்நுட்பத்தினூடாக மாற்றிமைக்கப்படுகின்றன.

உலகை இலங்கைக்கு கொண்டு வருவதில்

முக்கிய பங்காற்றும் பவர்

"நாட்டினால் உங்களுக்கு என்ன செய்ய முடியும் எனக் கேட்பதைத் தவிர்த்து, உங்களால் நாட்டுக்கு என்ன பங்களிப்பை செய்ய முடியும்" எனும் வரலாற்றுக்கூற்றுக்கமைய, பவர் என அறியப்படும், ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், இலங்கையில் அல்பிரட் பவர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது முதல் தொடர்ச்சியாக இந்தப் பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது. 125 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் பிரசன்னத்தைக் கொண்டுள்ள பவர், முன்னரை விடவும் மீண்டெழுந்திறனுடன், உறுதியான வளர்ச்சியை பதிவு செய்யும் வகையில் இயங்குகின்றது.

பல தசாப்த காலங்களாக தொடரும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில், விவசாயம், தொழிற்றுறை மற்றும் அறிவுசார் அம்சங்களில், தேசத்தின் நிலைபேறான வளர்ச்சியில் பவர் பெருமளவு பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது. சுவிட்சர்லாந்தின், ஜெனீவாவைச் சேர்ந்த Alfred et Eugenie Baurs மையத்தின் உரிமையாண்மையில் இயங்கும் இந்நிறுவனம், சுவிஸ் பாரம்பரியங்களுக்கமைய தனது பெறுமதிகளை பின்பற்றுகின்ற போதிலும், அனைத்து அம்சங்களிலும் உண்மையான இலங்கை நிறுவனமாக பவர் திகழ்கின்றது.

இலங்கையின் விவசாயத் துறையின் முன்னோடியாகத் திகழ்வதுடன், இந்தத் துறையில் தனது புத்தாக்கம் மற்றும் சாதனைகளை பவர் நிறுவனம் உறுதியாக பதிவு செய்துள்ளது. தெற்காசிய பிராந்தியத்தில் உயர் திறன் படைத்த, தொழில்நுட்ப அம்சங்கள் பொருந்திய உரக் கலவை வசதிகளை தன்வசம் கொண்டுள்ளதுடன், அமெரிக்காவின் சிறந்த துறைசார் செயற்பாட்டாளர்களிடமிருந்து இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்துள்ளது.

பயிர்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் படைப்புழுத் தாக்கம் (FAW) ஆரம்பித்த நிலையில், நாட்டின் பெருந்தோட்டப் பகுதிகளில் 2018 ஆம் ஆண்டில் பெரும் நெருக்கடியான நிலை எழுந்திருந்தது. இரு வருடங்களின் பின்னர் பவர் நிறுவனத்தின் ஆய்வு மற்றும் விருத்திப் பிரிவின் அணியினர் இந்தப் பீடைப் புழுத் தாக்கத்தை தணிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, இதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முதலாவது உயிரியல் களைநாசினியை வெற்றிகரமாக பதிவு செய்திருந்தனர்.

2021 ஆம் ஆண்டில் இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகளை தடை செய்யும் தீர்மானத்தை நாடு மேற்கொண்டிருந்த நிலையில், இலங்கையில் நிலைபேறான விவசாய மற்றும் சேதனப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற நிபுணர்களை பவர் அழைத்து வந்திருந்தது. பரந்தளவு பங்காளர் குழுக்களின் பங்கேற்புடன், பல்வேறு பயன்தரும் சந்திப்புகள் நடைபெற்றதுடன், நிலைபேறான விவசாய செயற்பாடுகளினூடாக பசுமையான பொருளாதாரத்துக்கு தனது உறுதியான பங்களிப்பை பவர் உறுதி செய்துள்ளதுடன், இந்தப் பிரிவில் முன்னணி ஆய்வு நிறுவனங்கள் மற்றும் கல்விமான்களின் ஆதரவுடன் சிறப்பு நிலையத்தை நிறுவுவதற்காக பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

சேதன உரத்துக்காக ISO சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கான முதல் படியை பவர் ஆய்வுகூட சேவைகள் மேற்கொண்டிருந்ததுடன், அதனை அண்மையில் பெற்றுக் கொண்டது. நிலைபேறான விவசாய செயன்முறைகள், பயிர் விளைச்சல்கள் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தல், சமூகத்துக்கு ஆரோக்கியமான உணவை உறுதி செய்தல் மற்றும் விவசாயிகள் மற்றும் சமூகத்துக்கு பாரியளவில் பாரதூரமான சூழல்சார் தாக்கம் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்வது போன்றவற்றை ஊக்குவிப்பதனுடாக நிறுவனத்தின் பயணத்துக்கு மேலும் வலுச் சேர்க்கப்படும்.

உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற சுகாதார பராமரிப்பு நிறுவனங்களில் ஒன்று, இலங்கையிலிருந்து தனது அலுவலகங்களை மூடி, அதன் விநியோகப் பணிகளை உள்நாட்டில் பிரிதொரு நிறுவனத்திடம் கையளிப்பதற்கு தீர்மானித்த நிலையில், பவர் நிறுவனம் அதன் முதலாவது தெரிவாக காணப்பட்டது. நாட்டின் முன்னணி இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகத்தர்கள் எனும் வகையில், தனது பரந்தளவு விநியோக வலையமைப்பினூடாக, நோயாளர்களுக்கு அவசியமான மருந்துப் பொருட்கள் மற்றும் தடுப்பூசிகள் போன்றன கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், Sanofi மற்றும் GSK ஆகிய நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கான இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்குரிய பிரத்தியேக பங்காளராக திகழ்ந்தது. Novartis, Roche, Merck, MSD, Takeda, Eisai போன்ற பல்தேசிய மருந்துப்பொருட்கள் உற்பத்தி நிறுவனங்கள் தொடர்ந்தும் பவர் மீது தமது உறுதியான நம்பிக்கையைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல தசாப்த காலங்களில் அதிகளவு புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறும் சூழலுக்கு இலங்கை முகங்கொடுத்துள்ள நிலையில், பவர் நிறுவனம் தனது Swiss Hotel Management Academy (SHMA) ஊடாக இலங்கையில் உலகப் புகழ்பெற்ற ecole hôtelière de lausanne இன் EHL Hospitality Business School இடமிருந்து VET by EHL கற்கையை விருந்தோம்பல் துறையைச் சேர்ந்தவர்களுக்காக வழங்க முன்வந்துள்ளது.

நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களில் பொருளாதார சவால்கள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், Swiss Agency for Development and Cooperation (SDC) உடன் பவர் கைகோர்த்து, Skills for Sustainable Growth (SSG) திட்டத்தை ஆரம்பித்திருந்தது. கொவிட்-19 தொற்றுப் பரவல் உச்சக்கட்டத்தில் காணப்பட்ட சூழலில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மூன்றாண்டுகளில் 2,240 இளம் திறன் படைத்த இளைஞர், யுவதிகளை உருவாக்குவதை இந்தத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளதுடன், ஹோட்டல் முகாமைத்துவத் துறையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது, துறையில் பணியாற்றுவதற்கு அவர்களை தயார்ப்படுத்துவதற்கு அவசியமான பயிற்சிகள் மற்றும் திறன் மேம்படுத்தல்களை வழங்கல் ஆகியவற்றை எய்துவதில் கவனம் செலுத்தும்.

இந்தச் செயற்பாடுகளினூடாக, VTA ஸ்ரீ லங்கா மற்றும் நெஸ்லே லங்கா ஆகியவற்றுடன் அண்மையில் கைகோர்ப்புகளை மேற்கொண்டு, நாட்டின் சுற்றுலாத் துறைக்கும் பவர் ஆதரவளிக்கின்றது. Edelweiss உடன் தனது நீண்ட கால பங்காண்மையினூடாக, இலங்கைக்கு சுவிஸ் சுற்றுலாப் பயணிகளை அழைத்துவருவதிலும் பவர் தனது பங்களிப்பை மேற்கொள்கின்றது.

ஒழுக்கச் செயற்பாடுகள் மற்றும் ஆளுகைச் செயன்முறைகள் போன்றவற்றில் உறுதியான தந்திரோபாய வழிமுறைகளை பின்பற்றுகின்றமையை கௌரவிக்கும் வகையில், ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பினால், இலங்கையில் மோசடிச் செயற்பாடுகளை குறைப்பதற்காக வியாபார சமூகத்தில் நற்செயற்பாடுகளை ஊக்குவிப்பதில் தனது முக்கிய பங்காளராக பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) பூர்த்தி செய்வதை நோக்கியும் பவர் செயற்பாடுகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது.

தனது சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளினூடாக பாடசாலை தளபாடங்களை நன்கொடையாக வழங்கும் நடவடிக்கைகளை பவர் முன்னெடுப்பதுடன், நாட்டின் 25 மாவட்டங்களில் இதுவரையில் 380க்கு அதிகமான பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அடங்கலாக 280க்கு அதிகமான நிறுவகங்களுக்கு நன்கொடைகளை வழங்கியுள்ளது. செவிப்புலன் குறைபாடுடைய சிறுவர்களுக்கான பாடசாலையின் பிரதான நன்கொடை வழங்குநராகவும் திகழ்கின்றது. குறைந்த வசதிகள் படைத்த நபர்களுக்கு பயிற்சிகளை பவர் வழங்குவதுடன், ஆறு மாத கால தொழிற்பயிற்சியை வழங்குவதுடன், முழு நேர தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் வழங்கியுள்ளது.

இலங்கையில் உறுதியான பிரசன்னத்தை பவர் கொண்டுள்ளதை அவதானிக்க முடிவதுடன், சிறந்த மற்றும் நெருக்கடியான காலப்பகுதிகளில் நாட்டுக்கு ஆதரவான தயாரிப்புகள் மற்றும் அறிவை கொண்டுவருவதில் பங்காற்றியுள்ளது. அல்பிரட் பவரினால் ஆரம்பிக்கப்பட்டு 125 வருடங்களாக தொடரும் பாரம்பரிய பெறுமதிகளுடன் தொடர்ந்தும் இயங்குவதுடன், தனது தற்போதைய வியாபார மாதிரிகளில் மேம்படுத்தல்களை மேற்கொள்வதுடன், நாட்டுக்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய புதிய பிரிவுகளுக்கு விரிவாக்கமடைந்த வண்ணமுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள பழைமையான பவர் கட்டடம்


பவர் நிறுவனத்தின் உயர், மேம்படுத்தப்பட்ட உரத் தொழிற்சாலை

விருந்தோம்பல் துறையில் திறன்கள் இடைவெளியை நிவர்த்தி செய்ய சுவிஸ் அரசாங்கத்துடன் பவர் இணைந்து செயலாற்றுகின்றது


இலங்கைக்கு சேதன விவசாய நிபுணர்களின் விஜயத்தின் போது

‘டைட்டானிக்’ மூழ்கிய கடற்பகுதியில் ‘சக்தி’

டைரக்டர் ஜேம்ஸ் கேமரூன்



கடலுக்குள் உடைந்து கிடக்கும் ‘டைட்டானிக்’ கப்பலின் சிதிலங்களை பார்க்க ‘டைட்டன்’ என்ற மினி நீர்மூழ்கி கப்பலில் சென்ற கோடீஸ்வரர்கள் 5 பேர், கப்பல் வெடித்து பலியான சம்பவம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த விபத்து குறித்து ‘டைட்டானிக்’ படம் எடுத்து புகழ்பெற்ற ஹொலிவுட் இயக்குநர் ஜேம்ஸ் கேமரூன் கருத்து தெரிவித்து உள்ளார்.

அவர் அளித்துள்ள பேட்டியில், “டைட்டானிக் கப்பல் மூழ்கிய இடத்திலேயே இந்த விபத்து நடந்து இருப்பது என்னை ஆச்சரியப்படுத்தி உள்ளது. ஏற்கெனவே நான் அந்த பகுதிக்கு 33 முறை சென்று வந்து இருக்கிறேன். அங்கு எனக்கு கூட சில பயங்கரமான அனுபவங்கள் ஏற்பட்டன. அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 500 மீட்டர் ஆழம் இருக்கும். அதனால் நீர்மூழ்கி கப்பல் மீது அதிகமான அழுத்தம் இருக்கும். அங்கு ஒவ்வொரு கணமும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சிறிய தவறு நடந்தாலும் அட்ரஸ் இல்லாமல் ஆகி விடுவோம்.

‘டைட்டானிக்’ கப்பல் மூழ்கிய பகுதியில் இனம்புரியாத அதீதமான ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. வெடித்து சிதறிய ‘டைட்டன்’ நீர்மூழ்கி கப்பலில் புதிய தொழில்நுட்பத்தில் ‘சென்சார்ஸ்’ உள்ளன. அதற்குள் இருக்கும் மனிதர்கள் விபத்தை முன்கூட்டியே கண்டுபிடித்து இருப்பார்கள். அதில் இருந்து ஜாக்கிரதையாக வெளியேறும் வழிகளும் உள்ளன. ஆனாலும் எதிர்பாராமல் நீர்மூழ்கி கப்பல் வெடித்துவிட்டதால் அவர்கள் எல்லோரும் இறந்து விட்டனர்” என்றார்.

மூட்டை எடுக்க முயன்றவரை சீறிய ராட்சத மலைப்பாம்பு

எல்லா உயிர்களும் தமது குட்டிகளைப் பாதுகாக்க எந்த எல்லைக்கும் செல்ல தயாராக இருக்கும். அதுபோன்ற ஒரு வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

சாதாரணமாக முட்டையிடும் இனங்கள் அதை அடைகாக்கும் போது அதன் முட்டைகள் மீது யாராவது கை வைத்தால் ஆக்ரோஷமாகிவிடும். அவ்வாறு ஜேப்ரூவர் என்ற உயிரியல் பூங்கா காப்பாளர் தனது பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் ராட்சத மலைப்பாம்பு அருகே செல்கிறார்.

அந்த மலைப்பாம்பின் அருகே ஏராளமான முட்டைகள் இருப்பதை காண முடிகிறது. அதில், ஒரு முட்டையை ஜேப்ரூவர் எடுக்க முயலும் போது மலைப்பாம்பு கோபம் அடைந்து, அந்தக் காப்பாளரை நோக்கி சீறுவது போலவும், அவரின் தொப்பியை கொத்த முயல்வது போலவும் காட்சிகள் உள்ளன.

இந்த வீடியோ 5.54 இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வைகளை பெற்றுள்ளது. வீடியோவை பார்த்த வலைத்தளவாசிகள் மலைப்பாம்புவை லாவகமாக கையாளும் காப்பாளரை பாராட்டி கருத்துகளை பதிவிட்டு வருகிறார்கள்.

இஸ்லாமாபாத்

ஆப்கான் பெண்களின் மேம்பாட்டுக்கு உறுதி

தலிபான்கள் ஆட்சி நடத்தி வரும் ஆப்கானிஸ்தானில் பொது இடங்களில் பெண்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

உயர்நிலை பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைகழகங்கள் ஆகியவற்றில் அவர்களை அனுமதிப்பது இல்லை. இந்நிலையில், ஈத் பண்டிகையையொட்டி தலிபான்களின் தலைவர் ஹிபத்துல்லா அகுன்சாடா வெளியிட்டுள்ள அறிக்கையில், தலிபான்கள் ஆட்சியில் கட்டாய திருமணம் உட்பட பெண்ளுக்கு எதிரான பாரம்பரிய நடைமுறைகளை அகற்றுவதற்கு பல உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

ஷரியத்தில் கூறப்பட்டுள்ள உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்கும் அவர்கள் வசதியாகவும் வளமாகவும் வாழ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளார்.

வெஸ்ட்மினிஸ்டர்

உக்ரைனுக்கு இராணுவ உதவி

ரஷ்யா- உக்ரைன் போரில் உக்ரைனுக்கு உதவி வரும் நாடுகளில் ஒன்றாக தற்போது நேட்டோ அமைப்பில் சேராத அவுஸ்திரேலியா உதவி வருகிறது. அந்நாடு சமீபத்திய உதவியாக, உக்ரைனுக்கு கூடுதலாக 70 இராணுவ வாகனங்களை அனுப்புகிறது.

110 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் ($73.5 மில்லியன்) தொகுப்பை உதவியாக அறிவித்த ஜனாதிபதி அந்தோணி அல்பானிஸ், “இந்த உதவி, ரஷ்யாவில் சென்ற வார இறுதியில் நடந்த உள்நாட்டு இராணுவ குழப்பத்திற்கு முன்பே பரிசீலனையில் இருந்தது. ரஷ்யாவின் நடவடிக்கைகளை கண்டித்து, எதிர்ப்பதிலும் உக்ரைன் வெற்றியை அடைய உதவுவதிலும் அவுஸ்திரேலியா உறுதியாக உள்ளது” என்று கூறினார்.

எனினும் கீவ், கோரிய ஹாகெய் இலகு ரக கவச ரோந்து வாகனங்களோ அல்லது புஷ்மாஸ்டர் காலாட்படை வாகனங்களோ இதில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

போபால்

இரட்டை சகோதரிகளை திருமணம் செய்த இரட்டையர்

மத்திய பிரதேச மாநிலம் ஷிந்த்வாரா பகுதியை அடுத்த திமிரி கிராமத்தை சேர்ந்த இரட்டை சகோதரிகள். இவர்கள் மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரை சேர்ந்த இரட்டை சகோதரர்களை திருமணம் செய்து கொண்ட ருசிகர சம்பவம் கோலாகலமாக நடைபெற்றது.

இரட்டையர்களின் இந்த இரட்டை திருமணத்தை பார்க்க அப்பகுதியை சேர்ந்த மக்கள் அதிக அளவில் குவிந்தனர். திருமணம் நடைபெற்ற இடம் முழுவதும் மலர்கள் மற்றும் அலங்கார பொருட்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்த 2 ஜோடிகளும் பார்ப்பதற்கு ஒரே தோற்றத்தில் இருந்ததாக இந்தத் திருமணத்திற்கு வந்தவர்கள் கூறினர்.

திருமணத்தை நடத்தி வைத்த புரோகிதர் பிரதீப் திவேதி கூறுகையில், “நான் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருமணங்களை நடத்தி வைத்துள்ளேன். ஆனால், இதுபோன்ற இரட்டையர்களின் திருமணத்தை நடத்துவது இதுவே முதல் முறை” என்றார். இரட்டை சகோதரிகள் பிறந்ததில் இருந்து தற்போது வரை ஒன்றாகவே வாழ்ந்து வருகின்றனர். தற்போதும் அவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வசிக்க உள்ளனர்.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

சுப்பர் சிக்ஸில் இலங்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளின் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்குள் இலங்கை நுழைந்துள்ளது.

புலவாயோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அயர்லாந்துடனான குழு பி போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே சுப்பர் சிக்ஸ் சுற்றுக்குள் இலங்கை நுழைந்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அயர்லாந்து

இலங்கை: 325/10 (49.5 ஓவ.)

(துடுப்பாட்டம்: திமுத் கருணாரத்ன 103 (103), சதீர சமரவிக்கிரம 82 (86), தனஞ்சய டி சில்வா ஆ.இ 42 (35), சரித் அஸலங்க 38 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் அடைர் 4/46, பரி மக்கார்தி 3/56, கரெத் டெலனி 2/52)

அயர்லாந்து: 192/10 (31 ஓவ.) (துடுப்பாட்டம்: கேர்ட்டிஸ் கம்பர் 39 (31), ஹரி டெக்டர் 33 (35) ஓட்டங்கள். பந்துவீச்சு: வனிடு ஹஸரங்க 5/79, மகேஷ் தீக்ஷன 2/29, தசுன் ஷானக 1/21, கசுன் ராஜித 1/22, லஹிரு குமார 1/33)

போட்டியின் நாயகன்: திமுத் கருணாரத்ன

இதேவேளை மற்றைய போட்டியில் ஓமானை ஸ்கொட்லாந்து வென்ற நிலையில் இவையும் சுப்பர் சிக்ஸுக்கு இக்குழுவிலிருந்து தகுதி பெற்ற நிலையில் அயர்லாந்து தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் ஸ்கொட்லாந்தை இலங்கை எதிர்கொள்ளவுள்ளதுடன், மற்றைய போட்டியில் ஐக்கிய அரபு அமீரகத்தை அயர்லாந்து எதிர்கொள்ளவுள்ளது.



அல் – அஹ்லியில் இணையவுள்ள பெர்மினோ?

சவுதி அரேபியக் கால்பந்தாட்டக் கழகமான அல் அஹ்லியில் இணைவதற்கான மேம்பட்ட பேச்சுக்களை இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான றொபேர்ட்டோ பெர்மினோ கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அல்-ஹிலாலில் இணைந்த குலிபலி

சவுதி அரேபிய கால்பந்தாட்டக் கழகமான அல்-ஹிலாலில் வெளிப்படுத்தப்படாத தொகையொன்றுக்கு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியின் பின்களவீரரான கலிடு குலிபலி இணைந்துள்ளார்.

கடந்தாண்டே இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலியிலிருந்து நான்காண்டு ஒப்பந்தமொன்றில் 32 வயதான குலிபலி, செல்சியால் கைச்சாத்திடப்பட்டிருந்தார்.

மன்செஸ்டர் சிற்றியிலிருந்து

குன்டோகனை கைச்சாத்திட்டதை உறுதிப்படுத்திய பார்சிலோனா

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் அணித்தலைரான இல்கி குன்டோகனைக் கைச்சாத்திட்டதை ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா உறுதிப்படுத்தியுள்ளது.

பார்சிலோனாவில் இரண்டாண்டு ஒப்பந்தத்திலும், மூன்றாவது ஆண்டொன்றைத் தெரிவாகக் கொண்டிருக்கவும் மத்தியகளவீரரான குன்டோகன் இணங்கியுள்ளார்.

திருகோணமலை கிரிக்கெட் சங்கத் தொடர்:

சம்பியனான ஸொடியாக்

ஹஸ்பர்

திருகோணமலை மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தால் நடாத்தப்பட்ட கிரிக்கெட் தொடரில் ஸொடியாக் கிரிக்கெட் கழகம் சம்பியனானது.

ரி.டி.சி.ஏ கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி போட்டியில் இந்து கிரிக்கெட் கழகத்தை வென்றே ஸொடியாக் சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஸொடியாக், இந்துவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், தக்சனன் 48 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், ஷானிக்க மலிந்த 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

பதிலுக்கு 174 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸொடியாக், 37.3 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், ஹாஃப்ரான் 47 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், ஹரிசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் நாயகனாக மற்றும் தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக ஷானிக்க மலிந்தவும், தொடரின் நாயகனாக ஹரிசனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக தக்சனனும், சிறந்த களத்தடுபாளராக ஸ்பென்ஸின் பனுஷந்தும் தெரிவாகினர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 27 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.